தினமணி

## பருத்தி ஏற்றுமதி தடை நீக்கம்

First Published : 12 Mar 2012 05:05:09 AM IST

புது தில்லி, மார்ச் 11:÷பருத்தி ஏற்றுமதிக்கான தடையை நீக்கி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

ஏற்றுமதிக்கு நிர்ணயிக்கப்பட்டதைவிட கூடுதலாக 10 லட்சம் பருத்தி பேல்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட நிலையில், உள்நாட்டில் அவற்றுக்கான தட்டுப்பாடு அதிகரித்தது. இதையடுத்து, கடந்த மார்ச் 5-ம் தேதி பருத்தி ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் கூட்டணிக் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்பிலிருந்து வந்த நெருக்குதலை அடுத்து, இப்போது தடையை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா கூறுகையில், ""விவசாயிகள், வியாபாரிகள், பருத்தியை சார்ந்த தொழிற்சாலைகளின் நன்மையைக் கருதி சமநிலை நோக்குடன் தீவிர ஆலோசனைக்கு பின்தான் இந்த முடிவை அமைச்சர்கள் குழு எடுத்துள்ளது. இது குறித்த முறையான அறிவிப்பு திங்கள்கிழமை வெளியிடப்படும்'' என்றார்.

பருத்தி ஏற்றுமதிக்கான தடையை நீக்கும் முடிவு மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

## ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி

First Published : 11 Mar 2012 11:21:09 AM IST

ஈரோடு, மார்ச் 10: ஈரோட்டில் ஆத்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட வேளாண் விற்பனை, வேளாண் வணிகத்துறை சார்பில் ஈரோடு வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இப்பயிற்சி நடைபெற்றது.

வேளாண் உதவி இயக்குநர் ப.சிதம்பரம், தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயராமன், பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குநர் ஜெயபிரகாஷ் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

வேளாண் துணை இயக்குநர் வே.பரமசிவம்(வேளாண் வணிகம்) சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம்

First Published : 11 Mar 2012 11:21:22 AM IST

ஈரோடு, மார்ச் 10: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 66.53 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 353 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது.

தினமலர்

உண்மையின் உரைகல்

## உற்பத்தி குறைவால் ஏலக்காய் விலை விர்...

மார்ச் 11,2012,02:31



சேலம்:சர்வதேச சந்தையில், இந்திய ஏலக்காய்க்கு மவுசு அதிகரித்துள்ள நிலையில், திருமண சீசன் காரணமாக, உள்நாட்டிலும் இதற்கான தேவை அதிகரித்து, விலையும் உயர்ந்துள்ளது.
மார்க்கெட்டில் ஏலக்காய்க்கு தட்டுப்பாடு நிலவுவதால், செவ்வாயன்று கிலோவுக்கு, 300 ரூபாய் அதிகரித்து, 1,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.
ஏலக்காய் உற்பத்தியில், கேரள மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து, தமிழகத்தில் தேனி மாவட்டத்தில், அதிக அளவில் ஏலக்காய் விளைகிறது. தமிழகத்தில் ஏலக்காய் விளைந்தாலும், கேரளா ஏலக்காய்க்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்நிலையில், கேரள மாநிலத்தில் ஏலக்காய் உற்பத்தியில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில் ஏலக்காய் உற்பத்தி எதிர்பார்த்த அளவு இல்லை. இதனால், இந்தியாவில் ஏலக்காய்க்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.
அதே நேரத்தில், தற்போது திருமண சீசன் என்பதால், ஏலக்காய்க்கு உள்நாட்டிலும் தேவை அதிகரித்துள்ளது. தேவை உயர்ந்து, உற்பத்தி சரிவடைந்துள்ளதால் ஏலக்காய் விலை அதிகரித்துள்ளது.ஏலக்காயின் ஏற்றுமதி உயர்ந்துள்ளதால், ஆன்-லைன் வர்த்தகத்தில், அதன் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. வெளிமார்க்கெட்டில் முதல் தர ஏலக்காய், கிலோவுக்கு, 300 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் வரை கிலோ, 900 ரூபாய்க்கு விற்ற முதல் தர ஏலக்காய், 300 ரூபாய் அதிகரித்து, கிலோ, 1,200 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இரண்டாம் தர ஏலக்காய் கிலோ, 700 ரூபாய்க்கு விற்றது, 1,000 ரூபாயாகவும், மூன்றாம் தர ஏலக்காய் கிலோ, 550 ரூபாய்க்கு விற்றது, 850 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.ஏலக்காய்க்கு மார்க்கெட்டில் தட்டுப்பாடு நிலவுவதால், பெரிய வியாபாரிகள் விற்பனையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். இதன் காரணமாக, ஏலக்காய் விலையில், மேலும் உயர்வு ஏற்படும் என தெரிகிறது.
சேலம், செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த ஏலக்காய் மொத்த வியாபாரி சத்தியமூர்த்தி கூறியதாவது:ஏலக்காய் நறுமணப் பொருளாக இருப்பதுடன், மருத்துவத்துக்காக அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இதனால், வெளிநாடுகளில் இந்திய ஏலக்காய்க்கு வரவேற்பு

அதிகரித்துள்ளது. மேலும், தற்போது திருமண சீசன் என்பதால், ஏலக்காயின் உள்நாட்டு தேவை, 30 சதவீதம் அதிகரித்துள்ளது.

**சமையல் எண்ணெய் விலை உயருகிறது - பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து**

மார்ச் 11,2012,02:33



எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைந்துள்ளதால், சமையல் எண்ணெய் விலையை உயர்த்த, நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர் - அக்டோபர்), நாட்டின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
**ரூபாயின் மதிப்பு** :மேலும், அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பு வீழ்ச்சியாலும், அமெரிக்காவில் சோயா சாகுபடி சரிவடைந்துள்ளதாலும், நாட்டின் சமையல் எண்ணெய் உற்பத்தி குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
இதையடுத்து, அண்மைக் காலமாக சமையல் எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. சென்ற பிப்ரவரியில் இருந்து, சமையல் எண்ணெய் விலை 5-10 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.இது குறித்து, அதானி வில்மர் நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி அங்ஷு மாலிக் கூறும்போது, " டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பில் அதிக அளவில் ஏற்றத்தாழ்வு உள்ளது.
உள்நாட்டில் சென்ற ஆண்டை விட, நடப்பாண்டில் கடுகு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் காரணமாக, கடந்த சில வாரங்களாக சமையல் எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது' என தெரிவித்தார்.சென்ற ஜனவரியில், சமையல் எண்ணெய் வகைகளின் விலை நிலையாக இருந்தது. ஆனால், பிப்ரவரியில் அவற்றின் விலை 5-10 சதவீதம் உயர்ந்துள்ளது.
அந்த மாதத்தின் துவக்கத்தில், ஜெய்பூரின் எம்.சி.எக்ஸ். முன்பேர சந்தையில், 10 கிலோ கடுகு எண்ணெய் விலை 715 ரூபாயாக இருந்தது. இது, மாத இறுதியில் 783 ரூபாயாக உயர்ந்து விட்டது. அதுபோன்று, மும்பையில், 10 கிலோ சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் விலை, 561லிருந்து

576 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**சந்தை மதிப்பு:**அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் வெளிமதிப்பு வீழ்ச்சி கண்டுள்ளதால், இறக்குமதியாகும் ஒரு டன் சமையல் எண்ணெயின் விலை, 1,200 டாலர் வரை உயர்ந்துள்ளது. இதனால் சில்லரை விற்பனையில் சமையல் எண்ணெய் விலை, கிலோவிற்கு 2 ரூபாய் வரை உயரும் என மாலிக் மேலும் கூறினார்.நாட்டின் சமையல் எண்ணெய் சந்தை மதிப்பு 75 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது. இதில், அமைப்பு சார்ந்த (பிராண்டட்), நிறுவனங்களின் பங்களிப்பு 40 சதவீதமாக உள்ளது.

**இறக்குமதி:**இந்தியாவின் ஒட்டுமொத்த சமையல் எண்ணெய் பயன்பாட்டில், இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெயின் பங்களிப்பு, 55 சதவீதத்தில் இருந்து 57.54 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.சென்ற ஆண்டு, உள்நாட்டில் சமையல் எண்ணெய் உற்பத்தி, 71.5 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு ஆண்டில் 69.5 லட்சம் டன்னாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம், நடப்பாண்டு, தனி நபர் எண்ணெய் பயன்பாடு, 12.96 கிலோவில் இருந்து 13.18 கிலோவாக உயரும் என உணவு அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது.உற்பத்திக்கும், தேவைக்கும் இடையிலான பற்றாக்குறை அதிகரித்து, இறக்குமதி உயரும் பட்சத்தில், சமையல் எண்ணெய் விலை மேலும் உயரும் என, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

**பாமாயில் விலை உயர்வு:**உலகளவில் பாமாயில் சப்ளையில் மலேசியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்நாட்டின் பாமாயில் உற்பத்தி, சென்ற ஆண்டு ஆகஸ்ட் முதல் குறைந்து வருகிறது. இதனால், பாமாயில் விலை உயர்ந்துள்ளது. சென்ற மாதம், மலேசியாவின் பாமாயில் கையிருப்பு 5.4 சதவீதம் குறைந்து 19 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

இதனால், பாமாயில் சப்ளை குறையும் என்ற எதிர்பார்ப்பில், மலேசிய முன்பேர சந்தையில், கடந்த ஒன்பது மாதங்களில் இல்லாத அளவாக அதன் விலை உயர்ந்துள்ளது. மே மாத சப்ளைக்கான ஒரு டன் பாமாயில் விலை, 1.5 சதவீதம் உயர்ந்து 3.352 ரிங்கிட் (1,114 டாலர்) ஆக அதிகரித்துள்ளது. பாமாயில் விலை உயர்வு காரணமாக, அதற்கு மாற்றாக விளங்கும் சோயா எண்ணெய்க்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனால் இதன் விலையும் கடந்த செப்டம்பர் மாதம் முதல் உயர்ந்து வருகிறது.

**பிரேசில் நாடு:**இந்நிலையில், சோயா உற்பத்தியில் முன்னணியில் உள்ள பிரேசில், அர்ஜென்டினா ஆகிய நாடுகளில் அதன் சாகுபடி குறையும் என, அமெரிக்க வேளாண் துறை மதிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக, சோயா எண்ணெய் விலையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்து வருகிறது. இதனால் பாமாயில், சோயா எண்ணெய் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வதற்கான செலவினம் அதிகரித்துள்ளதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## செம்மை கரும்பு சாகுபடி கருத்தரங்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2012,22:20 IST

கருத்தை பதிவு செய்ய

நெல்லிக்குப்பம் :நெல்லிக்குப்பம் இ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலை சார்பில் திருப்பாச்சனூரில் செம்மை கரும்பு சாகுபடி கருத்தரங்கம் நடந்தது.

கோட்ட அலுவலர் சிவக்குமார் தலைமை தாங்கினார். விவசாய பயிற்சி அலுவலர் உதயகுமார் செம்மை கரும்பு சாகுபடி பற்றி விளக்கம் அளித்தார். விவசாயிகள் அரிகிருஷ்ணன், நவநீதக்கிருஷ்ணன், ராமையா, பாலசுப்ரமணியன் பங்கேற்றனர்.

செம்மை கரும்பு சாகுபடி என்பது கரும்பு பயிரிடுவதில் புதிய தொழில் நுட்பமாகும். ஒரு கரு கரணைகளை நாற்றுகளாக வளர்த்து 30 நாளில் நடவு செய்ய வேண்டும். ஐந்து அடி இடைவெளியில் கால் அமைத்து இரண்டு அடி இடைவெளியில் ஒரு கன்று நடவேண்டும். சாதாரண முறையில் நடவு செய்வதை விட இம்முறையில் ஏக்கருக்கு 4,000 ரூபாய் செலவு குறையும். உரச்செலவு குறைவதுடன் மகசூல் அதிகமாக கிடைக்கும். இம்முறையில் சொட்டுநீர் பாசனத்தையும் பயன்படுத்தினால் 50 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்குமென அதிகாரிகள் கூறினர்.

## நவரை சாகுபடிக்கு தண்ணீரின்றி விவசாயிகள் கடும் அவதி

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2012,22:32 IST

கருத்தை பதிவு செய்ய

கிள்ளை :நவரை சாகுடிபடிக்கு நடவு செய்துள்ள விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

சிதம்பரம் அடுத்த கான்சாகிப் வாய்க்கால் மூலம் வரும் காவிரி தண்ணீரை நம்பி சிதம்பரம் கிழக்குப்பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் நடவு செய்து வருகின்றனர். கடற்கரையோரம் உள்ள விவசாயிகள் புயல் உள்ளிட்ட இயற்கை பேரிடர் காலங்களில் தண்ணீர் தேங்கி அடிக்கடி பாதிக்கப்படுதால் மேட்டுப்பகுதியில் இருப்பவர்கள் சம்பா பருவத்திலும், பள்ளத்தில் இருப்பவர்கள் நவரை சாகுபடியை நம்பி விதை நேர்த்தி செய்து நடவு செய்துள்ளனர். மானம்பாடி, சிங்காரக்குப்பம், தைக்கால், குச்சிப்பாளையம் பகுதியில் 2,000 ஏக்கருக்கும் மேல் நவரை சாகுபடிக்கு நடவு செய்யப்பட்டு நடவு பயிர்கள் நன்கு செழித்து பசுமையாக உள்ளது. தற்போது நடவுப் பயிர்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு உள்ள நிலையில் மேட்டுப்பகுதியில் உளுந்து, பயிர் விதைத்தவர்களுக்கு சாதகமாக ஒரு சிலர் பாசனத்திற்குரிய தண்ணீரை உப்பனாற்றில் திறந்து விடுகின்றனர்.

இதனால் நவரை சாகுடிபடிக்கு நடவு செய்துள்ள விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் தவிக்கின்றனர்.
பொதுப் பணித்துறையினர் நேரில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## பாமாயில் பயிரில் ஊடு பயிராக வாழை சாகுபடி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2012,22:36 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் :விழுப்புரம் பகுதிகளில் பாமாயில் பயிரில் வாழையை ஊடு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.
முந்திரி, மா, பலா போன்று 25 முதல் 30 ஆண்டுகள் நீண்டகால பலன்தரும் பயிராக பாமாயில் விளங்குகிறது. இதனால் பாமாயில் பயிரிடுவதில் விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சாகுபடி செய்த நான்காவது ஆண்டு முதல் மகசூல் துவங்கி விடுகிறது. முதல் இரண்டு ஆண்டுகள் இதனுள் ஊடுபயிராக உளுந்து, வாழை, கரும்பு, மணிலா, பருத்தி போன்ற பயிர்களை எளிதில் சாகுபடி செய்து கொள்ளலாம். ஓராண்டிற்கு பிறகு பாதுகாப்பாக இருப்பதால் இதனுள் வாழை ஊடுபயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தமிழக அரசு கடந்த ஐந்தாண்டுகளாக வேளாண்துறைமூலம் பாமாயில் சாகுபடிக்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது.
விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி, காணை, கோலியனூர் உட்பட 22 ஒன்றியங்களில் 7ஆயிரத்து 500 ஏக்கர் பாமாயில் பயிரிடப் பட்டுள்ளது.
ஒரு ஏக்கருக்கு 20 டன் பாமாயில் மகசூல் கிடைக்கிறது. ஒரு டன் 5 ஆயிரத்து 997 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.
அரியலூர் அருகேயுள்ள வாரணவாசியில் உள்ள தனியார் ஆலைக்கு விவசாயிகள் பாமாயில் விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர்.
இது குறித்து வேளாண் அலுவலர் சுப்ரமணி கூறியதாவது :
விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் ஆர்வமுடன் பாமாயில் பயிரிட்டு வருகின்றனர். அரசு பாமாயில் பயிரிடுவதற்கு தேவையான விதை மானியம்(கன்றுகள்)16 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. மின் இணைப்புள்ளவர்களுக்கு போர் அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபாயும், முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஊடுபயிர் செய்வதற்கு 50 சதவீதம் மானியம் அல்லது 10 ஆயிரமும், சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பினால் இரண்டரை ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும்

வழங்கப்படுகிறது.
மாவட்டத்தில் பாமாயில் சாகுபடி விவசாயிகள் கடந்த ஆண்டு 250

## விழுப்புரம் பகுதி கிராமங்களில் வேர்க்கடலை அறுவடை துவக்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2012,22:46 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் :விழுப்புரம் அருகே உள்ள கிராம பகுதிகளில் வேர்க்கடலை அறுவடை பணிகள் துவங்கியது.
விழுப்புரம் அருகே கொளத்தூர், திருப்பச்சாவடிமேடு, ராமானுஜபுரம், கண்டமானடி ஆகிய கிராம பகுதிகளில் சம்பா, மக்காச்சோளம் அதிகளவில் பயிரிடப்படுகிறது.
இவற்றுக்கு அடுத்தபடியாக அதிகளவில் வேர்க்கடலை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். மூன்று மாத கால சாகுபடியான வேர்க்கடலை பயிருக்கு குறைந்தளவிலான தண்ணீர் போதுமானதாக உள்ளது.தற்போதுள்ள மின்பற்றாக்குறையை கருத்தில் கொண்டுள்ள இப்பகுதி விவசாயிகள் வேர்க்கடலை பயிர் சாகுபடியை அதிகளவில் செய்துள்ளனர்.இதில் தண்ணீருக்கு பதிலாக அதிகளவில் டி.ஏ.பி., காம்போஸ் உரங்களை அதிகளவில் தெளிப்பதன் மூலம் வேர்கடலை பயிரில் அதிக மகசூலை குறைந்த காலத்தில் பெற முடிகிறது.
கடந்த சில தினங்களாக அறுவடை பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். ஒரு ஏக்கருக்கு 20 மூட்டைகள் வேர்க்கடலை மகசூல் கிடைக்கிறது.

## கால்நடை தீவனமாக "கரும்புச்சோகை': விரிவாக்கக் கல்வி இயக்குனர்

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2012,22:36 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை :"கால்நடை தீவனங்களின் பற்றாக்குறையை, கரும்புச் ÷\ ஙகை மூலம் குறைக்க முடியும்' என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் மையம் அறிவுறுத்தியுள்ளது.
தமிழகத்தில் நிலவும் கால்நடை தீவனங்களின் பற்றாக்குறையினை, பசும் கரும்புத்÷\ ஙகையின் மூலம் குறைக்க முடியும். வேளாண் கழிவுகளாக உள்ள கரும்புச்தோகையை, உபயோகமுள்ளதாக மாற்றலாம் என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி விரிவாக்கக் கல்வி இயக்குநர் கதிரேசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை :
தமிழகத்தில் 17வது கால்நடை கணக்கெடுப்பின் படி, சுமார் 91.41 லட்சம் மாடு, 16 லட்சம் எருமை, 81.77 லட்சம் வெள்ளாடு மற்றும் 55.93 லட்சம் செம்மறியாடுகள் உள்ளன. இதற்கு தேவைப்படும் பசுந்தீவனத்தில் சுமார் 100.64 லட்சம் டன் பற்றாக்குறையாக உள்ளன. அரசின் விலையில்லா ஆடு மற்றும் மாடுகள் வழங்கும் திட்டத்தினால், இப்பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும். இந்த பற்றாக்குறையை, பசும்கரும்புத் ÷\ õகை மூலம் குறைக்கலாம்.
தமிழகத்தில் சுமார் 29.33 லட்சம் எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 4.46 மில்லியன் டன் பசும் கரும்புச்÷\ õகை வேளாண் கழிவாகக் கிடைக்கிறது.
இவை, வீடுகளுக்குக் கூரைவேயவும், கரும்பு வயல்களில் எரிக்கப்பட்டும் வீணாகிறது.
தமிழகத்தில் கரும்பு சாகுபடி நடக்கும் (டிச., முதல் பிப்.,) போது கிடைக்கும் மற்ற வேளாண்கழிவுகளுடன், பசும் கரும்புச்÷\ õகையை சேர்த்து தீவனமிட்டால், கால்நடை வளர்ப்பில் தீவனச் செலவைக் குறைத்து லாபம் ஈட்ட முடியும்.
பசும்புல்லை விட கரும்புச்÷\ õகையில் புரதச்சத்து(36%) குறைவாக இருந்தாலும், நார், கொழுப்பு, கரையும் மாவு உள்ளிட்ட ஊட்டச் சத்துக்கள், வைக்கோலுக்கு இணையாக உள்ளன. மேலும், நார்சத்தின் செரிமானத்தை குறைக்கும் "லிக்னின்' எனும் ரசாயனம் 8-9 சதவீதம் உள்ளதால், இது செரிமானத்தன்மை மிகுந்த வேளாண்கழிவாக உள்ளது.
கரும்பு அறுவடை காலங்களில் கிடைக்கும் பசும் கரும்புச் ÷\ õகையை மட்டுமே தீவனமாக அளித்தால், சாணம் மற்றும் சிறுநீர் வழியாக சுண்ணாம்பு, மணிச்சத்து(பாஸ்பரஸ்) உடலிலிருந்து வெளியேறும். தீவனத்துடன் சுண்ணாம்புத் தூள் இரண்டு சதவீதம், குடிநீர் தொட்டி உட்புறம் நீர்த்த சுண்ணாம்பை தடவுதல், உலர வைத்து பின்பு தண்ணீர் வைத்தல் போன்ற முறைகளால் இதனை கட்டுப்படுத்தலாம்.
சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள மர இலைகளை, தினமும் கரும்புச் ÷\ õகையுடன், தீவனத்தில் 10 முதல் 12 கிலோ சேர்த்து அளிக்கலாம்.
மணிச்சத்தின் இழப்பினை தடுக்க கோதுமை தவிடை தீவனத்துடன் சேர்க்கலாம். சுவைகுறைவாக இருக்கும் உலர்ந்த கரும்புச்÷\ õகையை சிறிது,சிறிதாக வெட்டி, சமையல் உப்பை தெளித்தால், கால்நடைகள் வீண் செய்யாது. வைகோலிற்கு மாற்றாக இதைத்தீவனமாக பயன்படுத்தலாம்.
பசும் கரும்புச்÷\ õகையைப் பதப்படுத்த முடியாத விவசாயிகள் உலரவைத்து, பிற வேளாண்கழிவுகள், கலப்புத் தீவன வகைகளுடன் சேர்த்து முழுத்தீவனமாக கொடுக்கலாம்.
வேளாண் கழிவுகளில் உலர்ந்த நிலக்கடலைக் கொடி மற்றும் ÷\õளத்தட்டை குறிப்பிட்ட அளவில் கரும்புச்÷\ õகையுடன் சேர்ப்பதால், நல்ல செரிமானத்தன்மையுள்ள தீவனமாக இருக்கும்.
மேலும், வளரும் கிடாரிகன்றுகளுக்கு கரும்புத்÷\ õகை 30 சதவீதம், கடலைக்கொடி 50 சதவீதம், மக்காச்÷\õளம் 6 சதவீதம், கடலைபிண்ணாக்கு 14 சதவீதம், சூரியகாந்தி பிண்ணாக்கு 5 சதவீதம், பருத்திக்கொட்டை பிண்ணாக்கு 5 சதவீதம், மரவள்ளிக்கிழங்கு திப்பி 7 சதவீதம், சமையல் உப்பு 1

சதவீதம் மற்றும் தாது உப்பு இரண்டு சதவீதம் என்ற அளவில் அளிப்பதால், நாளொன்றுக்கு சுமார் 325-330 கிராம் வரை எடை கூடும். ஒரு கிலோ எடைக்கூட, 7.50 முதல் 8.0 வரை முழுத்தீவனம் தேவைப்படும்.

குறைந்த அளவு பால் கொடுக்கும் கறவை மாட்டிற்கு கரும்புச்÷\ ôகை 30 சதவீதம், கடலைக்கொடி 30 சதவீதம், 40 சதவீத கலப்புத் தீவனத்துடன் கலந்து கொடுப்பதால், நல்ல பலன் கிடைக்கும். செம்மறியாடுகளுக்கு கரும்புச்÷\ ôகை 30 சதவீதம், கடலைக்கொடி 30 சதவீதம், மக்காச்÷\ôளம் 6 சதவீதம், கடலைபிண்ணாக்கு ஐந்து சதவீதம், சூரியகாந்தி பிண்ணாக்கு ஐந்து சதவீதம், பருத்திக்கொட்டை பிண்ணாக்கு 5.5 சதவீதம், மரவள்ளிக்கிழங்கு திப்பி 16 சதவீதம், சமையல் உப்பு ஒரு சதவீதம் மற்றம் தாது உப்பு இரண்டு சதவீதம் என்ற அளவில் தீவனம் அளிக்கலாம். ஒரு எக்டரில் விளைந்த கரும்புச்÷\ ôகையை,

மேற்கூறிய தீவனமுறையில் மூன்று மாதம் வயதுடைய 60-70 செம்மறியாட்டுக் குட்டிகளை, ஒரு வயது வரை வளர்க்கலாம்.வேளாண் கழிவான கரும்புச்÷\ ôகையை, இந்த முறையில் பயன்படுத்தினால், தமிழகத்தில் பசும்தீவனப் பற்றாக்குறையைப் பெருமளவு குறைக்கமுடியும்.

## வெயில் தாக்கம் அதிகரிப்பு எலுமிச்சை விலை உயர்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2012,23:41 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : கோடை துவங்கியுள்ளதையடுத்து, திருப்பூரில் வெயில் தாக்கம் அதிகரித்துள்ளது. தாகத்தை தணிக்க மக்கள் தர்பூசணி, இளநீர், எலுமிச்சை ஜூஸ், குளிர்பானங்களை நாடுகின்றனர்.

நகரின் முக்கிய ரோடுகளில் குளிர்பானங்கள்

விற்பனை கடைகள் ஏராளமாக முளைத்துள்ளன. தாகம் தீர்ப்பதுடன், சூட்டை தணிப்பதில் எலுமிச்சை முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலானோர்

வீடுகளில் வாங்கி வைத்து ஜூஸ் போட்டு அருந்து

கின்றனர்; கடைகளிலும் சர்பத் போன்ற குளிர்பானங்களுடன் எலுமிச்சை பிழிந்து பருகவே ஆர்வம் காட்டுகின்றனர்.

தென்னம்பாளையம் மார்க்கெட், உழவர் சந்தைக்கு பொங்கலூர், பெருமாநல்லூர், குன்னத்தூர், சூலூர் பகுதிகளிலிருந்து எலுமிச்சை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. சீசன் இல்லாத நிலையில், குறைந்தளவு மட்டுமே வரத்துள்ளது. வெயில் தாக்கத்தால் தேவை அதிகரித்துள்ளது; ஆனால், வரத்து குறைந்துள்ளதால் எலுமிச்சை விலை உச்சத்தை தொட்டுள்ளது. வழக்கமாக ஒன்று முதல் இரண்டு ரூபாய் வரை விற்கப்படும் எலுமிச்சை பழம் ஒன்று, தற்போது ஐந்து ரூபாயாக உயர்ந்துள்ளது.